## பாடம்- 24 பத்துக் கட்டளைகளைக் கொடுத்தல் (யாத் 19:20)

நீங்கள் வளர்ந்து கொண்டிருக்கும் பொழுது உங்கள் பெற்றோரும், மற்ற குடும்ப நபர்களும் மற்றும் தலைவர்களும் வாழ்க்கையை வாழ்வதற்கான விதிமுறைகளைக் கற்றுக் கொடுத்திருப்பார்கள். உங்கள் கலாச்சாரம் சில நடத்தைகளை அனுமதிக்கின்றது, சிலவற்றை தடை செய்கிறது.

இந்த விதிமுறைகள் மக்களின் கடந்தக் கால அனுபவங்கள், நம்பிக்கைகள் மற்றும் அவர்கள் உலகத்தை நோக்கும் வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது இஸ்ரவேல் மக்களுக்கும் அவ்வாறுதான் இருந்தது. எது எப்படியானாலும், இந்த பாடத்தில் அவர்கள் தேவனிடத்திலிருந்து வாழ்வதற்கு விதிமுறைகளை பெற்றதைப் பற்றிக் கற்போம்.

தேவனின் விதிமுறைகள் தான் இன்று வரை நடைமுறையில் உள்ளது. நாம் இவ்விதிமுறைகளின் படி வாழ்ந்தால் தான் தேவன் பிரியப்படுவார்.

இஸ்ரவேலர் எகிப்தை விட்டு மூன்று மாதத்திற்கு பிறகு, 'தேவனின் மலை' என்று கருதப்படும் சீனாய் மலைக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அங்கே மலைக்கு எதிராகப் பாளயமிறங்கியப் போது, மோசே தேவனிடத்தில் உரையாட மலைக்கு சென்றான். தேவன் மோசேயிடம், "நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைகொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள். நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று இஸ்ரவேரிடம் கூறு'' என்றார்.

மோசே அதை ஜனங்களிடம் சொன்ன போது, அவர்கள் அனைவரும் ஒருமனப்பட்டு, ''கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்" என்றனர்.

ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை, மோசே கர்த்தரிடத்தில் தெரிவித்தான். அப்பொழுது கர்த்தர் மோசேயினிடம், ''நான் உன்னோடே

பேசும் போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன். அவர்கள் இரண்டு நாட்கள் செலவிட்டு, தங்களைப் பரிசுத்தப்படுத்தி, தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, சகல அசுத்தங்களையும் நீக்கவும் அதற்கு பிறகு, சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாக மலையின்மேல் இறங்கி அவர்களுடன் பேசுவேன்.

அதுவரைக்கும் அவர்கள் மலையில் ஏறாதபடிக்கும், அதின் அடிவாரத்தைத் தொடாதபடிக்கும் எச்சரிக்கையாய் இருக்கச் சொல்'' என்றார்.

ஜனங்களும் மோசே கூறியபடியே செய்தனர். மோசே அவர்களை பரிசுத்தப்படுத்தியப் பிறகு, அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்துத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள். மூன்றாம் நாளில் இடிமுழக்கங்களும், மின்னல்களும் உண்டானப் பொழுது, ஜனங்கள் எக்காள சத்தத்தைக் கேட்டனர். அந்த எக்காள சத்தம் வரவர பலமாய்த் தொனித்தது.

கர்த்தர் சீனாய் மலையின் மேல் அக்கினியில் இறங்கினபடியால், அது முழுவதும் புகைக்காடாய் இருந்தது. பூமி முழுவதும் அதிர்ந்தது. அப்பொழுது மோசே பேசினான். தேவன் அவனுக்கு வாக்கினால் மறுமொழி கொடுத்து, அவனை மலையின் கொடுமுடிக்கு வரவழைத்தார்.

அப்பொழுது தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த்தைகளுமாவன.

“உன்னை எகிப்திலிருந்து பலத்த கரத்தால் புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே! என் ஜனங்களாகிய உங்களுக்கு நான் அளிக்கும் கட்டளைகள் இவையே.

- என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

- மேலே வானத்திலும், கீழே பூமியிலும் பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.

- உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

- ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஏழாம் நாளிலே யாதொரு வேலையும் செய்யாமல் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். அது தேவன் பரிசுத்தப்படுத்தின ஓய்வு நாளாகும்.
- உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்தில், உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

- கொலை செய்யாதிருப்பாயாக.

- விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.

- களவு செய்யாதிருப்பாயாக.

- பிறனுக்கு விரோதமாக பொய்யோ அல்லது பொய் சாட்சியோ சொல்லாதிருப்பாயாக.

- பிறனுடைய எந்த ஒரு பொருளையும் இச்சியாதிருப்பாயாக.

இந்த நியாயபிரமாணத்தின் முதல் பாதி தேவனுடனான உறவைப் பற்றியும், இரண்டாம் பாதி மனிதனுடனான உறவைப் பற்றியும் கூறுகிறது. அப்பொழுது இஸ்ரவேலர் பயத்தால் நடுங்கி, “நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம். தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக. பேசினால் நாங்கள் செத்துப்போவோம்” என்று மோசேயினிடம் கூறினார்கள்.

மோசே ஜனங்களை நோக்கி, “பயப்படாதிருங்கள்! தேவன் உங்கள் பரலோக ராஜாவாகும்படிக்கு ஒரு உடன்படிக்கைச் செய்ய வந்துள்ளார். நீங்கள் தேவனுக்கு மரியாதை செலுத்தி,

பாவஞ்செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் உங்களுக்கு இருப்பதற்காகவும் தேவன் எழுந்தளுளினார்'' என்றான்.

மேலும், தேவன் பரிசுத்தராயிருப்பதால் நீங்கள் அவருக்கு மிகுந்த மரியாதையை செலுத்த வேண்டும் என்றான். அதற்கு பின்பு, மோசே மலைக்கு எறிப் போனான். தேவன், ஜனங்கள் எவ்வாறு வாழ்க்கையை வாழ வேண்டும், பிறருடன் எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும், என்பதைப் பற்றிய விரிவான போதனையை கொடுத்தார்.

மேலும், எவ்வாறு பலிகளை செலுத்த வேண்டும், எவ்வாறு தம் உடைமையைக் காக்க வேண்டும் என்பதைப் பற்றியும் விளக்கிக் கூறினார். இரண்டாம் முறை மோசே கீழே இறங்கி வந்து தேவனுடைய போதனைகளை மக்களுக்கு மறுபடியும் கற்பித்தான். ஜனங்கள், "கர்த்தர் சொன்னதையெல்லாம் செய்வோம்!" என்று பதிலளித்தார்கள்.

மோசே மலையின் அடிவாரத்தில் பலிபீடத்தைக் கட்டி தகனப் பலியையும், சமாதான பலியையும் செலுத்தினான். அந்த பலிகளின் இரத்தத்தில் பாதியை பலிபீடத்தில் தெளித்தான். பின்பு தேவன் பேசிய வார்த்தைகளை ஜனங்களுக்கும் சொன்னான். அதற்குப் பிறகு, அந்த வார்த்தைகளை உடன்படிக்கை புத்தகத்தில் எழுதினான்.

இஸ்ரவேலர் தேவனுக்கு கீழ்படிவோம் என உறுதி அளித்தவுடன், மோசே பலிகளின் மீதி இரத்தத்தை அவர்களின் மேல் தெளித்து, ''இந்த வார்த்தைகள் யாவையும் குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே'' என்றான்.

இந்தப் பாடம் மிகவும் முக்கியமானது. ஏனெனில் இது தேவனுடைய பரிசுத்தமும், ஜனங்களுக்கு சீனாய் மலையின் மீது கொடுக்கப்பட்ட தேவனுடையக் கட்டளைகளும் எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளது என்பதைக் கற்பிக்கிறது.

இந்த பாடத்தின் முக்கிய உண்மை என்னவென்றால் தேவன் பத்துக் கட்டளைகளையும் மற்றும் பல போதனைகளையும் கொடுக்க காரணம், மக்கள் தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய பரிசுத்தத்தைக் காத்துக் கொள்வதற்கும் தேவனுடன் ஓர் ஐக்கியம் ஏற்படுத்துவதற்குமே ஆகும்.

ஜனங்கள் தேவன் கூறியதை செய்ய உடன்பட்டவுடன் தேவனும் அவர்களுடன் உடன்படிக்கைச் செய்தார்.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

1. ஏன் தேவன் தம் ஜனங்கள் வாழ்வதற்குக் கட்டளைகளைக் கொடுத்தார்? (5 நொடிகள் நிற்க)

தேவன், "நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைகொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்" என்றார் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. தேவனுடைய மலையை அடையும் முன் ஜனங்கள் செய்ய வேண்டியது என்ன? (5 நொடிகள் நிற்க)

மோசே, அவர்களைப் பரிசுத்தப்படுத்தவும் அவர்கள் இரண்டு நாட்கள் செலவிட்டு தங்களை ஆயத்தப்படுத்தி, தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்கவும் கூறினான் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. தேவன் ஏன் மலையின் மீது காட்சியளித்தார்? ( 5 நொடிகள் நிற்க)

"தேவன், ஜனங்கள் தமக்கு மிகுந்த மரியாதை செலுத்தி, பாவஞ்செய்யாதபடிக்குத் தம்மை பற்றும் பயத்தோடு இருப்பதற்காக எழுந்தருளினார்" என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள்.

பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தை ஓர் சக விசுவாசிக்குக் கூறி, “ஏன் நாம் தேவனுடையக் கட்டளைகளை மீற பயப்பட வேண்டும்?’ என கேட்கவும்.

நாம் பாவம் செய்து, தேவனுடைய கட்டளைகளை மீறினால் நாம் அந்த உடன்படிக்கையை மறந்து, அவரிடத்திலிருந்து பிரிந்துப் போகிறோம்.

பாடம் முடிந்தது